# சொகுசு காரை விட மெட்ரோ ரெயில் சிறந்தது

## -ரகுமான் பதிவு



புது புது அர்த்தங்கள், கல்கி உள்ளிட்ட படங்களின் நாயகனான ரகுமான் தற்போது வில்லன், குணச்சித்திர வேடங்களில் நடித்து வருகிறார்.இவர் சைக்கிளிங் செய்வது, ஜிம் ஒர்கவுட், உடற்ப யிற்சிகள் உட்பட பல புகைப்படங்களையும் வெளியிடுவார்.

தற்போது சென்னை யில் மெட்ரோவில் பயணம் செய்தது பற்றி பதிவிட்டுள்ளார். மெட்ரோ ரயிலில் பயணம் செய்யும் படம் ஒன்றைப் பகிர்ந்துகொண்ட அவர் "நான் ஒவ்வொரு முறை யும் சென்னை யிலி ருந்து திரும்பும் போது விமான நிலையம் செல்ல மெட்ரோவைப் பயன்படுத்துகிறேன்.

பெராரி காரை விட இது மிகவும் வசதியானது, தூய்மையானது, மாசு இல்லாதது மற்றும் விரைவானது. . மெட்ரோ ஒருபோதும் தோல்விய டையாது. எப்போதும் நம்பகமான மற்றும் சரியான நேரத்தில் கொண்டு சேர்க்கக்கூடியது" என்றும் பாராட்டி பதிவிட்டுள்ளார்.